**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CRLMP.NO. 216/2025 PW-2

| | |
|---|---|
| Name | லட்சுமிநாராயணன் |
| Husband/Father Name | சுகுமாறன் |
| Village /Area | இராணிப்பேட்டை |
| Taluk | |
| Occupation | தனியார் துறை |
| Age | 42 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 22.10.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தனியார் துறையில் வேலை செய்து வருகிறேன். மாலதி என்பவர் எனது மனைவி வழி உறவினர் ஆவார். நான் 2021 வரை விஜயவாடாவில் பணி செய்து வந்தேன். பின்பு அந்த பணியை ராஜினாமா செய்து இராணிப்பேட்டை வந்துவிட்டேன். 2022-2023 காலகட்டத்தில் வேலை தேடி வந்தேன். அப்போது மாலதி எனது மனைவியிடம் அவருக்கு அரசாங்க வேலை வாங்கி தருவதாக கூறினார். அதற்கு ரூ.5,00,000/- பணம் கேட்டார். நான் வேலையில் இல்லாததததல் கடன் வாங்கியும் நகை வைத்தும் தான் கொஞ்சம் கொஞ்சமான பணம் கொடுத்தோம். முதலில் 13.08.2022 அன்று ரூ.45,000/- பணம் Online மூலமாக பரிவர்தனை செய்தேன். 22.08.2022 அன்று இரண்டு முறை ரூ.75,000/- மொத்தம் ரூ.1,50,000/- Online மூலமாக மாலதிக்கு பரிவர்தனை செய்தேன். பின்பு மீண்டும் பணம் கேட்டார் என்று Online மூலமாக மாலதிக்கு பணம் அனுப்பினேன் மொத்தமான நான் மாலதிக்கு அனுப்பிய தொகை

ரூ.3,45,000/- ஆகும். அனைத்து தொகைகளும் Net Banking மூலமாகவே அவருக்கு அனுப்பப்பட்டது. பின்பு அவரை தொடர்பு கொண்டு வேலை வேண்டும் என்று கேட்டதற்கு அவர் வேலை ஏற்பாடாகிவிட்டது அதற்காக ஆறு நபர்களுக்கு வேலை நிச்சியமாகிவிட்டது என்பதற்காக ஒரு ஆவணத்தை வாட்சப் மூலம் அனுப்பினார் அதனை நான் எனக்கு தெரிந்தவர்களிடம் காண்பித்து விசாரித்த போது அது போலியானது என்றும் அரசாங்க வேலைக்கான ஆணை அது போல் அளிக்கப்பவதில்லை என்றும் கூறினார்கள். பின்பு எனது மனைவியும், அவரது சகோதரரான காஞ்சி மன்னனும் மாலதியிடம் சென்று பணத்தை திருப்பிதருமாறு கேட்டனர். அதற்கு அவர் தர இயலாது என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்று விரட்டியுள்ளார். அதனால் தான் நீதிமன்றத்தை நாடியுள்ளோம். நான் பணம் அனுப்பியதற்கான எனது வங்கி பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.10.23 11:02:32 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.